# அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்று தரமதிப்பீட்டில் A+ தகுதி பெற்றது)

நாள் : 06.06.2017

ஸ்டாப் செலக்சன் கமிசன் பணியிடங்களுக்கான இலவச பயிற்சி

மத்திய அரசின் காலிப் பணியிடங்களை ஸ்டாப் செலக்சன் கமி'ன் எனப்படும் எஸ்.எஸ்.சி., அமைப்பு பொது எழுத்துத் தேர்வுகளை நடத்தி அதன் மூலம் நிரப்பி வருகிறது. இந்த அமைப்பின் சார்பாக சி.ஜி.எல்., எனப்படும் கம்பைன்டு கிராஜுவேட் லெவல் பொது எழுத்துத் தேர்வுகளை நடத்துவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம் மத்திய அரசின் பல்வேறு துறைகளில் காலியாக உள்ள இடங்கள் நிரப்பப்பட உள்ளன.

பிரிவுகள்: இந்தப் பணியிடங்கள் குரூப் பி மற்றும் சி என்ற பிரிவுகளைச் சார்ந்தது. இதன் மூலம்

1. சி.ஏ.ஜி., சென்ட்ரல் செக்ரட்டேரியட் சர்வீஸ்,

2. மினிஸ்ட்ரி ஆப் ரயில்வே, வெளியுறவுத் துறை,

3. சென்ட்ரல் எக்சைஸ், சி.பி.ஐ.,

4. நர்காடிக்ஸ் பீரோ உள்ளிட்ட பல்வேறு கேந்திரமான துறைகளில் உள்ள காலியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

எழுத்துத் தேர்வினை எளிதில் எதிர்கொள்ளும் வகையில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக தன்னார்வ பயிலும் வட்டம் சார்பில் இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட உள்ளது.இதற்கான பயிற்சி வகுப்புகள் 10.06.2017 (சனிக்கிழமை) அன்று காலை 10 மணிக்கு அழகப்பா பல்கலைக்கழக தன்னார்வ பயிலும் வட்டத்தில் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட உள்ளது.

இப்பயிற்சியில் பங்கு பெற விருப்பம் உள்ளவர்கள் பழனியப்ப செட்டியார் நினைவரங்கத்தில் இயங்கும் தன்னார்வ பயிலும் வட்டத்திற்கு நேரில் சென்று பெயரை பதிவு செய்து கொள்ளலாம். 04565- 223266 என்ற தொலைபேசியிலோ அல்லது 88707-81897 என்ற எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம். அல்லது alagappauniversitystudycircle@gmail.com என்ற மின்அஞ்சல் மூலமாகவும் பதிவு செய்யலாம்.

வயது வரம்பு : எஸ்.எஸ்.சி., அறிவித்துள்ள மேற்கண்ட காலியிடங்களுக்கான வயது விண்ணப்பிக்கும் பதவியைப் பொறுத்து மாறுபடுகிறது.

கல்வித் தகுதி: பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தின் மூலமாக ஏதாவது ஒரு பிரிவில் பட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். சில பதவிகளுக்கு சிறப்புத் தகுதிகள் தேவைப்படும். முதுகலை பட்டப் படிப்பு பயில்வோரும் இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்க வேண்டும்.

கடைசி நாள் : 2017 ஜூன் 16.

விபரங்களுக்கு: http://ssc.nic.in/SSC_WEBSITE_LATEST/notice/notice_pdf/CGLE2017Notice.pdf

பேரா. வி. பாலச்சந்திரன்

பதிவாளர் (பொ.)